விகாரி ௵ மார்கழி ௴
டிஸம்பர் 2019 - ஜனவரி 2020

ஸ்ரீ:

மலர்: 2
இதழ்: 9

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





**MONTHLY NEWSLETTER FROM:**

## SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com





விகாரி ௵ மார்கழி ௴
டிஸம்பர் 2019 - ஜனவரி 2020

மலர்: 2
இதழ்: 9

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: Sri Sudhakar Thirumalai, Sri Rajagopalan Madhavan & Sri K. Akash
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay,



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்[3]ரி ஸமம் ஸ்தா[2]நம் ப்[3]ரஹ்மாண்டே[3] நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே[3]வோ ந பூ[4]தோ ந ப[4]விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

மார்கழி என்றாலே நினைவில் வருவது, பக்தி தொடர்பான எண்ணங்களும் செயல்களும் – பொங்கலும்தான். அதை ஒட்டிய சில வார்த்தைகள்.

நமக்கு நண்பர்களோ / எதிரிகளோ, நாமேதான். எதிரிகள் யார் தெரியுமா? ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார் - இந்த உடலையே ஆத்மாவெனவும்; ஆத்மாவானது எவர்க்கும் அடிமையல்ல, சுதந்திரமானது எனவும்; இறைவன் என ஒருவன் கிடையாது எனவும் தவறாகக்கொள்ளும் எண்ணங்கள்தான். இதை, ‘அஹங்காரம் / மமகாரம்’ எனக் கூறுவர்.

இவ்விதமான நினைப்பு பொங்குவது ‘மார்பில்’தானே. இதைக் கழிக்கவேணுமல்லவா! இதை ‘மார் + கழி’ என கடைக் குறைத்தலாக சொல்கிறார்கள் போலும்!! இந்த எண்ணங்களுக்கு வடிகாலாக அமைவது, நம் திருக்கோயிலில் நடைபெறும் உத்ஸவங்கள்.

இந்த ஸஞ்சிகையில் ஒளிப்படங்கள் மூலம் கண்ணுக்கு விருந்தாக அமையும் காக்ஷிகள்:

- ✓ தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம்
- ✓ கலியன் உத்ஸவம்
- ✓ திருப்பாணன் சாற்றுமறை உத்ஸவம்
- ✓ திருக்கார்த்திகை தீபோத்ஸவம்

இவைகளுடன் விசேஷ வ்யாஸங்கள்.

வழக்கமான மாத உத்ஸவப் பட்டியல், பஞ்சாங்கம், இவைகளும் இடம் பெறுகின்றன.

மூன்று இதழ்களாக தொடர்ந்துவரும் ஆங்கிலக் கட்டுரைப் பகுதி, இதிலும் தொடர்கிறது. வாசகர்களின் கருத்துக்களை ஆவலுடன் வரவேற்கிறோம்,

கண்டு வாசித்து இன்புறுமின்!

## விகாரி வருட மார்கழி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயதாரர் |
|---|---|---|---|---|---|---|
| டிஸம்பர் / ஜனவரி | மார் கழி | | | | | |
| 17.12.19 | 1 | ஷஷ்டி | செவ்வாய் | மகம் | திருமழிசையாழ்வார் | |
| 18.12.19 | 2 | ஸப்தமி | புதன் | பூரம் | ஸ்ரீ ஆண்டாள் | |
| 19.12.19 | 3 | அஷ்டமி | வியாழன் | உத்தரம் | தாயார் | |
| 20.12.19 | 4 | நவமி | வெள்ளி | ஹஸ்தம் | கூரத்தாழ்வான் | |
| 21.12.19 | 5 | தசமி | சனி | சித்திரை | மதுரகவிகள் | |
| 22.12.19 | 6 | ஏகாதசி | ஞாயிறு | ஸ்வாதி | பெரியாழ்வார் | |
| 23.12.19 | 7 | த்வாதசி | திங்கள் | விசாகம் | நம்மாழ்வார் | |
| 24.12.19 | 8 | த்ரயோதசி | செவ்வாய் | அனுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் | |
| 25.12.19 | 9 | சதுர்தசி | புதன் | கேட்டை | தொண்டரடிப் பொடிகள் சாற்றுமுறை. மாலை – பெருமாள், தொண்டரடிப் பொடிகள் வீதி புறப்பாடு, இரவு – ஸேவாகாலம், சாற்றுமுறை | உபயம் ஸ்ரீ S. ஸுதர்சனம் |
| 26.12.19 | 10 | கோவில் அமாவாசை | வியாழன் | மூலம் | ஹனுமத் ஜெயந்தி – ஆஞ்ஜனேயர் மூலவர், உத்ஸவர் திருமஞ்சனம். | ஹனுமத் ஜெயந்தி – ஸ்ரீ V.K. சக்ரவர்த்தி ஐயங்கார் |
| 27.12.19 | 11 | ப்ரதமை | வெள்ளி | பூராடம் | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 1ம் நாள் | பகல் பத்து 10 நாட்களும் – ஸ்ரீ மதி எச்சம்மாள் பண்ட் |
| 28.12.19 | 12 | த்வீதீயை | சனி | உத்தராடம் | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 2ம் நாள் | |
| 29.12.19 | 13 | த்ருதீயை | ஞாயிறு | ச்ரவணம் | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 3ம் நாள் | |
| 30.12.19 | 14 | சதுர்த்தி | திங்கள் | அவிட்டம் | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 4ம் நாள் | |
| 31.12.19 | 15 | பஞ்சமி | செவ்வாய் | சதயம் | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 5ம் நாள் | |
| 01.01.20 | 16 | ஷஷ்டி | புதன் | பூரட்டாதி | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 6ம் நாள் | |
| 02.01.20 | 17 | ஸப்தமி | வியாழன் | உத்தரட்டாதி | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 7ம் நாள் | |
| 03.01.20 | 18 | அஷ்டமி | வெள்ளி | ரேவதி | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 8ம் நாள் | |
| 04.01.20 | 19 | நவமி | சனி | அச்வினி | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 9ம் நாள் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 05.01.20 | 20 | தசமி | ஞாயிறு | பரணி | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 10ம் நாள், ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் முதல் நாள். காலை ஆண்டாள் புறப்பாடு, திருமஞ்சனம். | ஆண்டாள் உத்ஸவம் – ஸ்ரீ S. கோபாலன் |
| 06.01.20 | 21 | ஏகாதசி | திங்கள் | க்ருத்திகை | வைகுண்ட ஏகாதசி – காலை – பெருமாள், நம்மாழ்வார், தேசிகன் பரமதவாசல் ஸேவை – உள் புறப்பாடு – பிறகு பெருமாள் கருட வாஹனம் – நம்மாழ்வார், தேசிகன் கேடயம் வீதி புறப்பாடு – பெருமாள் திருமஞ்சனம் – இராப்பத்து ஆரம்பம் – மாலை – பெருமாள், நம்மாழ்வார் உள் புறப்பாடு – இரவு – ஸேவாகாலம். ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 2ம் நாள். காலை ஆண்டாள், திருமஞ்சனம் | ஆண்டாள் உத்ஸவம் – ஸ்ரீ R. ஸந்தான க்ருஷ்ணன். ஏகாதசி உத்ஸவம் – ஸ்ரீ K.R. ஸ்ரீநிவாஸன். இராப்பத்து 10 நாட்களும் – ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 07.01.20 | 22 | த்வாதசி | செவ்வாய் | க்ருத்திகை (20.10) / ரோஹிணி | அத்யயன உத்ஸவம் – இராப்பத்து 2ம் நாள் – மாலை – பெருமாள், நம்மாழ்வார் உள் புறப்பாடு – இரவு – ஸேவாகாலம்.ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 3ம் நாள். காலை ஆண்டாள் புறப்பாடு, திருமஞ்சனம் | ஸ்ரீ முரளி ரங்கநாதன் |
| 08.01.20 | 23 | த்ரயோதசி | புதன் | ரோஹிணி (22.06) | அத்யயன உத்ஸவம் – இராப்பத்து 3ம் நாள் – மாலை – பெருமாள், நம்மாழ்வார் உள் புறப்பாடு – இரவு – ஸேவாகாலம். ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 4ம் நாள். காலை ஆண்டாள் புறப்பாடு, திருமஞ்சனம் | ஸ்ரீ S. அருண் |
| 09.01.20 | 24 | சதுர்தசி | வியாழன் | ம்ருகசீர்ஷம் | அத்யயன உத்ஸவம் – இராப்பத்து 4ம் நாள் – மாலை – பெருமாள், நம்மாழ்வார் உள் புறப்பாடு – இரவு – ஸேவாகாலம். ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 5ம் நாள். காலை ஆண்டாள் புறப்பாடு, திருமஞ்சனம் | ஸ்ரீ P.V. பார்த்தஸாரதி குடும்பத்தினர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10.01.20 | 25 | பௌர்ணமி | வெள்ளி | திருவாதிரை | அத்யயன உத்ஸவம் – இராப்பத்து 5ம் நாள் – மாலை – பெருமாள், நம்மாழ்வார் உள் புறப்பாடு – இரவு – ஸேவாகாலம். ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 6ம் நாள். காலை ஆண்டாள் புறப்பாடு, திருமஞ்சனம் | ஸ்ரீமதி கீதா ஸ்ரீநிவாஸன் |
| 11.01.20 | 26 | ப்ரதமை | சனி | புனர்வஸு | அத்யயன உத்ஸவம் – இராப்பத்து 6ம் நாள் – மாலை – பெருமாள், நம்மாழ்வார் உள் புறப்பாடு – இரவு – ஸேவாகாலம். ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 7ம் நாள். காலை ஆண்டாள் புறப்பாடு, திருமஞ்சனம் | ஸ்ரீ கோபால்சாமி ஐயங்கார் பண்ட் – ஸ்ரீ ஆனந்த் ரங்காச்சாரி |
| 12.01.20 | 27 | த்வீதீயை | ஞாயிறு | புஷ்யம் | அத்யயன உத்ஸவம் – இராப்பத்து 7ம் நாள் – மாலை – பெருமாள், நம்மாழ்வார் உள் புறப்பாடு – இரவு – ஸேவாகாலம். ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 8ம் நாள். காலை ஆண்டாள் புறப்பாடு, திருமஞ்சனம் | ஸ்ரீ V.P. ப்ரேம்குமார் |
| 13.01.20 | 28 | த்ருதீயை | திங்கள் | ஆயில்யம் | அத்யயன உத்ஸவம் – இராப்பத்து 8ம் நாள் – மாலை – பெருமாள், நம்மாழ்வார் உள் புறப்பாடு – இரவு – ஸேவாகாலம். ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் 9ம் நாள். காலை ஆண்டாள் புறப்பாடு, திருமஞ்சனம் | ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன் |
| 14.01.20 | 29 | சதுர்த்தி | செவ்வாய் | மகம் | அத்யயன உத்ஸவம் – இராப்பத்து 9ம் நாள் – போகி திருக்கல்யாண உத்ஸவம்.ஆண்டாள் நீராட்ட உத்ஸவம். 10ம் நாள். காலை ஆண்டாள் புறப்பாடு. பின்பு பெருமாள், ஆண்டாள் திருமஞ்சனம். மாலை பெருமாள், நம்மாழ்வார் உள் புறப்பாடு, பெருமாள், ஆண்டாள் வீதி புறப்பாடு. பின்பு திருக்கல்யாண உத்ஸவம். திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை. பின்பு சேர்த்தி ஸேவை | ஆண்டாள் உத்ஸவம் – ஸ்ரீ ஜகன்மோகன், போகி உத்ஸவம் – ஸ்ரீ K. ரங்கநாதன் |

ஸ்ரீ:

# ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணம்

ஸ்ரீ உ.வே. திருவயிந்தை திருவாழி க்ருஷ்ணதேசிகாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

ஸ்ரீ வில்லிபுத்தூர் திவ்ய ஷேத்ரத்தில் திருவாடிப் பூரத்தில் ஸ்ரீ பெரியாழ்வாருக்குத் திருமகளாய் அயோநிஜையாய் பூமாதேவின் அவதாரமாக அவதரித்தவள் ஸ்ரீ கோதை நாச்சியார். கல்ப ஸூத்ர வ்யாக்யாதாவான தனது தந்தையாருடன் பெருமாளுக்கான புஷ்ப கைங்கர்யத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள் ஆண்டாள். ஆழ்வார், எம்பெருமானுக்கு என்று தொடுத்து வைத்திருந்த பூமாலையைத் தான் சூடி தன்னைக் கண்ணாடியில் அழுகுபார்த்தாள் தினமும். இது ஆழ்வாருக்குத் தெரியவே அவரும் பெருமாளிடம் அபசாரக்ஷமாபநம் செய்ய, அவள் சூடிய மாலையே எம்பெருமானும் தமக்கு போக்யமென்று நியமித்து தானும் அதையே தினமும் சூடினான். எனவே இவளை ''சூடிக் கொடுத்த நாச்சியார்'' என்று ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹம் இன்றளவும் அழைக்கிறது. இவளது அதீத பகவத் பக்தி வடபத்ரசாயியின் பேரில் மையல்/காதல் கொள்ளச் செய்தது. அவனையே தன் கணவனாக நினைத்து வரித்தாள்.

''பதிஸம்யோக ஸுலபம் வயோத்ருட்வாசமே பிதா'' என்று ஸ்ரீ ஜநகர் ஸீதா பிராட்டிக்கு விவாஹம் செய்ய யோசித்ததுபோல் பெரியாழ்வாரும் ஸ்ரீ ஆண்டாளுக்கு விவாஹம் பண்ண எண்ணியபோது,

**''தந்மே பவாந் கலு வ்ருத: பதிரங்க ஜாயாம்**
**ஆத்மார்பிதச்ச பவதோத்ர விபோ விதேஹி**
**மாவீராபக மபிமர்த்து சைத்ய ஆராத்**
**கோமாயுவந் ம்ருக பதேர் பலிமம்புஜாக்ஷ''**

என்றபடி க்ஷத்ரியர்கள் யுத்தத்திற்கு செல்லும் முன் சிங்கத்திற்கே பலியிடுவர். அதை நரி வந்து தீண்டி விட்டால் ஆகாது. அதுபோல் நரசிம்மன்னான உமக்கு சேரவேண்டிய அடியேனை சிசுபாலன் வந்து எடுக்கும் முன் காக்கவேண்டும் என்றபடி, தாமே நாச்சியார் திருமொழியில் **''ஊனிடையாழி சங்கு உத்தமர்க்குத் தான் தாம்; மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்''** என்று ஸங்கல்பித்தாள். ஆழ்வாரும் செய்வதறியாது திகைத்தார். கண்ணனே தன்னை வந்து கைப்பிடிப்பதாகக் கனாக்கண்டு அவன் அழகில் மயங்கி நின்றாள். ஆழிமழைக் கண்ணன், கண்ணாலம் கோடித்துக் கன்னியின் கைப்பிடிப்பான் என்றும் நம்பினாள்.

*காறை பூணும், கண்ணாடி காணும் தன் கையில்*
*வளை குலுக்கும்*
*கூறை உடுக்கும் அயர்க்கும், தன் கொவ்வைச்*
*செவ்வாய் திருத்தும்*



*தேறித் தேறி நின்றாயிரம் பேர் தேவன் திறம் பிதற்றும்*
*மாறில் மாமணிவண்ணன் மேல் இவள் மாலுருகின்றாளே.*

என்றபடிக்குத் தன்னை அழகுபடுத்திக்கொண்டாள். **''சாக்ஷாந் மந்மத மந்மத:''**, மன்மதனே உன்னை வணங்குகின்றேன் என்றும், மென்னடை அன்னம் பறந்து விளையாடும் வில்லிபுத்தூர் உறைகின்ற பவளவாயனை வரக்கூவினாள்.

தோரணம் நாட்ட, காளைபுகுத, அந்தரிசூட்ட, காப்புகட்ட, நம்பி கைத்தலம் பற்ற, தீவலம் செய்ய, அம்மி மிதிக்க, பொரிமுகந்து அட்ட, மஞ்சனமாட்ட, அதிரப்புகுத, மத்தளம் கொட்ட, வரி சங்கம் ஊத, முத்துடைத்தாமப் பந்தலின் கீழ், வாய் நால்லார்கள் மறையோத, அவன் திருக்கையால் தாள் பற்ற, கனா கண்டாள். அவன் நினைவாகவே இருந்து உருகினாள், கரைந்தாள்.

*இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்*
*நம்மையுடையவன் நாராயணன் நம்பி*

*செம்மையுடைய திருக்கையாள் தாள் பற்றி*
*அம்மி மிதிக்க கனாக்கண்டேன் தோழீ நான்.*

என்றாள்.

ஆனால் அவன் மால் செய்து வந்தான். ''மாலாய் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனைக்'' கைப்பிடிக்க மனம் உருகி நின்றாள். அவளது ப்ரார்த்தனை பலிக்காமல் போனது. உடனே **''தந்தையும், தாயும் உற்றாரும் நிற்கத், தனி வழி போயினாள் என்னும் சொல்லு, வந்தபின்னை பழி காப்பரிது''** என்று பாடி, **''புருஷ: புராணனான''** திருவரங்கனை, கற்றினம் மேய்த்த கண்ணனை மனம் உருகிப் பாடினாள். அவளது தோழிகள் திருவரங்கனை வயது முதிர்ந்தவன், கருடனை வாஹனமாகவும், ஆதிஷேஷனைப் படுக்கையாகவும் உடையவன் என்று கூறி அவன் வேண்டாம் என்று எடுத்துரைத்தனர். ஆனால் அவள் பிடிவாதமாக கண்ணனான திருவரங்கனையே காதல் செய்தாள். அவனே தன்னைக் கைப்பிடிப்பான் என்று மஹா விச்வாசத்தோடே திடமாக நம்பினாள். பாலாலிலையில் துயில் கொண்ட பரமன் வலைப்பட்டு, கோலால் நிரைமேய்த்த ஆயனின் தண்ணந்துழாயைக் கொண்டு என் குழல்மேல் சூட்டிடுங்கோள் என்று அழுது புலம்பினாள்.

*கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான் காடுவாழ்*
*சாதியும் ஆகப்பெற்றான் பற்றி உரலிடையாப்பு*
*முண்டான் பாவிகாள்! உங்களுக்கு ஏச்சுக்கோலோ*
*கற்ற பேசி வசவுணாதே காலிகள் உய்ய மழைதடுத்து*
*கொற்றக் குடையாக ஏந்தி நின்ற கோவர்த்தனத்து*
*என்னை உய்த்திடுமின்.*

என்று வேண்டினாள்.

அவன் வராதது கண்டு உள்ளம் உருகி, மாதவனின் வாய்ச்சுவையை விருப்புற்றுக் கேட்டு ஆழி சங்கத்திடம், வெண்சங்கே, கோலப் பெருஞ்சங்கே, பாஞ்சசன்னியமே, வலம்புரியே, செல்வம் அழகிய சாலதுவே, செல்வப் பெருஞ்சங்கே, மாதவனில் வாய் அமுதத்தை நீயே விரும்பி உண்கின்றாயே! எனக்கும் அளிக்க வேண்டும் என்று பலவாறு மன்றாடி வேண்டுகிறாள்.

*உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதன்*
*கண்படை கொள்ளல் கடல்வண்ணன் கைத்தலத்து*
*பெண்படையார் உன் மேல் பெரும் பூசல் சாற்றுகின்றார்*
*பண்பல செய்கின்றாய் பாஞ்சசன்னியமே.*

என்று கூறுகின்றாள்.

மறுபடியும் அவன் வராமை கண்டு, திருவேங்கட மாமலையில் உலாவுகின்ற மேலாப்பு விரித்த மேகங்காள், நிதிசொரியும் மாமுகில்காள், அளியத்த மேகங்காள், கிளர்ந்தெழுந்த தண் முகில்காள், கார்காலத்துக் கார்முகில்களை திருவேங்கடவனிடம் தூதுவிடுத்துத் தன் துயரத்தைத் தெரிவிக்கின்றாள்.

அவனும் வருவான் என்றில்லை என்பதனால், பின்பும்,



கருவிளைமலர்கள், காயாமலர்கள், குயில்கள், மயில்கள், பூவை நறுமலர்கள், வண்டினங்கள், பூஞ்சுனைகள், சுனையில் தங்கும் செந்தாமரைகள், காலை எழுந்து மாலின் வரவு சொல்லும் கரிய குருவிக்கணங்கள், போன்றவற்றை சிலம்பாறுடை திருமாலிரும் சோலை அழகருக்கு தூது விடுத்து அவர் தன்னை மணமுடிக்க வேண்டுகிறாள். எனினும் அவன் வரவில்லை.

பின்பு, கார்க்கோடல் பூக்கள், பாடும் குயில்கள், கணமா மயில்கள், தோகைவிரித்து நடமாடும் மயில்கள், மழை, கடல் போன்றவற்றையும் தூது விடுத்து செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம் செய்வது என்? என்று கூறி நம்பிரானிடம் கூறும்படி விண்ணப்பிக்கின்றாள்.

எம்பெருமான் நாச்சியாரின் ஆழ்ந்த பக்தியையும், தன்மேல் உள்ள காதலையும் கண்டு மனம் இரங்கி, தாம் அவரது பெண்ணை மணப்போம் என்று ஆழ்வாரிடம் ஸாதித்தார். ஆழ்வாரும் மிக்க பூரிப்புடன் ஸ்ரீ ஆண்டாளை ஸர்வாபரண பூஷிதையாக அலங்கரித்து, திருக்கோயிலுக்கு ஸகல பரிவாரங்களுடன், வாத்ய கோஷங்களுடன் அழைத்துச் சென்றார். அங்கு பெருமாள் அவளை ஸ்வீகரிக்க, அவருடன் இரண்டறக்கலந்தாள்.

ஸ்ரீ பெரியாழ்வார் கண்ணீருடன்,

*ஒருமகள் தன்னை உடையேன் உலகம் நிறைந்த புகழால்*
*திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால் தான் கொண்டு போனான்*
*பெருமகளாய்க் குடிவாழ்ந்து பெரும்பிள்ளை பெற்ற அசோதை*
*மருமகளைக் கண்டு உகந்து மணாட்டுப்புறம் செய்யும் கொலோ?*

என்று பாடினார். இப்படியாக ஸ்ரீ கோதையின் திருக்கல்யாண வைபவம் இனிதே நடைபெற்றது.

**வங்கக்கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத்**
**திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி**
**அங்கப்பறை கொண்டவாற்றை அணிபுதுவைப்**
**பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன**
**சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே**
**இங்கிப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்**
**செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமாலால்**
**எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்**


ஸ்ரீ:






ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமத்யை கோதாயை நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

வேதபாராயண சபா (பதிவு)
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
4, கேசவப்பெருமாள் சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004

தநுர் (மார்கழி) மாத திருப்பாவை உபந்யாஸம்
15.12.2019 முதல் - மாலை 6.30 முதல் 8.00 வரை



நிகழ்த்துபவர்:
ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி
ஸ்ரீ பௌண்டரீகபுரம் ஸ்ரீமத் ஆண்டவன்
(பரவாக்கோட்டை சின்னாண்டவன்)
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ கோபால மஹாதேசிகன்



ஸ்ரீ ஆண்டாளின் நன்மக்கள் யாவரும் மேற்படி உபந்யாஸத்தில் பெருந்திரளாக அன்வயித்து, சங்கத்தமிழ்மாலை முப்பதும் தப்பாமல் கேட்டு, எங்கும் திருவருள் பெற்று இன்புற்று, மாமயிலை திவ்யதம்பதிகள், ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீ ஆழ்வார் ஆசார்யர்கள், ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் மற்றும் ஸ்ரீமதாண்டவன் அநுக்ரஹத்திற்கு பாத்திரர்களாகும்படி ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

இங்ஙனம் - வேதபாராயண சபா அங்கத்தினர்கள்


**Sponsorships and donations towards publication expenses are welcome**







தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம்







தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம்

















தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம்






கலியன் திருநக்ஷத்ரம்






திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம்













திருக்கார்த்திகை தீபோத்ஸவம்







ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் மற்றும் பௌண்டரீகபுரம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆத்யக்ஷத்தில்
முன்னாள் அட்டார்னி ஜெனரல் ஸ்ரீ பராசரனுக்கு நம் ஸந்நிதியில் பாராட்டு விழா













ஸ்ரீ:



ஸ்ரீ பராசரன் ஸ்வாமிக்கு நம் தேவஸ்தானத்தின் சார்பில்
'ஸீதாராம பாதுகா ஸேவகர்' என்ற விருது வழங்கி கௌரவித்தல்









ஸ்ரீ:

# திருமாலை அநுபவம்

ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

*வண்டினம் முரலும் சோலை மயிலினம் ஆலும் சோலை ★*
*கொண்டல்மீதணவும் சோலை குயிலினம் கூவும்சோலை ★*
*அண்டர்கோன் அமரும் சோலை அணிதிருவரங்கமென்னா ★*
*மிண்டர் பாய்ந்து உண்ணும் சோற்றை விலக்கி நாய்க்கிடுமினீரே.*

திருமாலை - 14

*மன்னுமதிள் திருமண்டங்குடிதான் வாழ*
*மார்கழிமாதக் கேட்டைநாளில் வந்து ★*
*துன்னுபுகழ்த்தொண்டரடிபொடியே நீ முன்*
*துழாய்மாலை பணியடிமை செய்து நாளும் ★*
*தென்னரங்க மணவாளர்க்கு அன்புமிக்குச்*
*செப்பிய நல்திருமாலை நாற்பத்தைந்தும் ★*
*பன்னிய நல் திருப்பள்ளியெழுச்சிப்பத்தும்*
*பழவடியேனுக்கருள்செய் பரிந்து நீயே.*

ப்ரபந்தஸாரம் – 11

*கோதண்டே ஜ்யேஷ்ட நக்ஷத்ரே மண்டங்குடி புரோத்பவம் ★*
*சோளோர்வ்யாம் வநமாலாம்சம் பக்தாங்க்ரிரேணுமாச்ரயே.*

**முன்னுரை**

ச்ரிய: பதியான ஸ்ரீமந்நாராயணனுடைய ஸ்ரீவைஜயந்தியின் (வனமாலை) அம்சராய் சோழ நாட்டில் அமைந்துள்ள திருப்பதியான திருப்புள்ளம் பூதங்குடிக்கு அருகிலுள்ள திருமண்டங்குடி என்னும் க்ஷேத்ரத்தில் ஒரு ப்ரபவ வருடம் மார்கழி மாதம் கேட்டை நக்ஷத்திரத்தில் ஒரு ஸ்ரீவைஷ்ணவ சோழியகுலத்தில் அவதரித்தவர் விப்ர நாராயணர். இவர் பெரியபெருமாளான அணியரங்கன் அடியவர்க்கு அடிமை செய்து அவர்களுடைய திருப்பாதத்து கள்களை எப்பொழுதும் வணங்கி வந்ததால் தொண்டரடிப்பொடியாழ்வார் என்றழைக்கப்பட்டார்.

மற்றைய ஆழ்வார்கள், முறையே எம்பெருமானுடைய பரத்வம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி மற்றும் அர்ச்சை ஆகியவற்றில் ஈடுபட்டபோது, தொண்டரடிப் பொடிகளோ அர்ச்சாவதாரங்களில் சிறப்புற்ற பெரிய பெருமாளையல்லது வேறு அறியாதிருந்த பெருமை யுடையவர். இவர் நாற்பத்தைந்து பாசுரங்களைக் கொண்ட திருமாலை மற்றும் பத்துப் பாசுரங்களைக் கொண்ட திருப்பள்ளியெழுச்சி என்னும் இரண்டு அற்புதமான ப்ரபந்தங்களை அருளிச்செய்துள்ளார்.

எனவே இவ்வாழ்வார், குழலழகர், வாயழகர் மற்றும் கண்ணழகர் என்று ஸ்ரீ ஆண்டாள் திருவாக்கினால் ஏற்றம் பெற்ற ஸ்ரீ ரங்கநாதனுடைய அர்ச்சாவதார வடிவழகில் ஈடுபட்டு, தமது இரண்டு ப்ரபந்தங் களிலும் திருவரங்கனை மட்டும் மங்களாசாஸனம் செய்துள்ளார்.



திருமாலை என்னும் ப்ரபந்தம், ஸ்ரீசௌநகர் அருளிய ஸ்ரீவிஷ்ணு தர்மத்தின் ஸாரமாகக் கொள்ளப்படுகிறது.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய திருமாலைக்கு, திருவரங்கப் பெருமாளரையர் என்னும் ஆசார்யர் கீழ்க்காணும் தனியனை அருளிச்செய்துள்ளார் :-

*மற்றொன்றும் வேண்டா மனமே மதிளரங்கர் ★*
*கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ் ★*
*உற்ற திருமாலைப்பாடும் சீர்த் தொண்டரடிப்பொடி*
*எம்பெருமானை ★ எப்பொழுதும் பேசு.*

'ஏ நெஞ்சமே! ஏழுமதிள்களையுடைய திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பவனும், பசுக்கூட்டங்களை மேய்த்தவனுமான எம்பெருமானுடைய திருவடிகளில் ஊன்றிய பக்தியை உடையவரும், திருமாலை என்னும் ப்ரபந்தத்தைப் பாடுபவரும், கல்யாண குணங்கள் பொருந்தியவரும், தொண்டரடிப்பொடி என்றழைக்கப்படுபவருமான எங்களது ஸ்வாமியை

எப்பொழுதும் அநுஸந்திப்பதைத் தவிர, வேறு ஒரு புருஷார்த்தமும் வேண்டுவதில்லை.'

மற்றைய ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்களும் சொல்மாலை ஆனாலும், ''திருமாலை'' என்னும் தனிப்பெயர் இத்திவ்யப்ரபந்தத்திற்கே ஆயிற்று என்பது கருத்து. ''திருமாலை அறியாதார் திருமாலை அறியாதரே'' என்னும் பெரியோர் மொழியும் இங்கு அறியத் தக்கதாகும். இத்தனியனால், ஆசார்யனின் திருநாமத்தை எப்பொழுதும் போற்றவேண்டும் என்னும் கருத்தும் சொல்லப்படுகிறது.

இப்படி ஆழ்வாரால் அநுபவித்துத் தொடுக்கப்பட்ட நாற்பத்தைந்து பாசுரங்களினால் ஆன உயர்ந்த திருமாலையை நாம் ஆசார்யர்கள் மூலமாகத் தெரிந்து, பின் அதிலுள்ள சில பாசுரங்களின் மூலமாக திருமாலை நாம் அறிந்து அநுபவிப்போம்.

*காவலில்புலனைவைத்துக் கலிதன்னைகடக்கப் பாய்ந்து ★*
*நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர்தலைகள் மீதே ★*
*மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வ நின் நாமம் கற்ற ★*
*ஆவலிப்புடைமைகண்டாய் அரங்கமாநகருளானே. [1]*

ப்ரளய காலத்தில் எல்லா உலகங்களையும் தம்முடைய திருவயிற்றிலே வைத்துப் பாதுகாத்து, பின் வெளிப்படுத்திய உலகுக்குக் காரணபூதனான எம்பெருமானுடைய திருநாம பலத்தாலே இந்த்ரியங்களைத் தகாத விஷயங்களில் செல்லாதபடி அடக்கி, பகவத் விஷயங்களில் தாம் ஈடுபட்டபடியைக் கூறி. அப்படி எம்பெருமானுடைய திருநாமத்தைக் கற்றதால் உண்டான (ஆவலிப்பு) கர்வத்திலே, முன்பு யமன், முதலியவர்களுடைய பெயரைக் கேட்கவும் அஞ்சியவர், இப்பொழுது யமன் வாசலிலே சென்று அறைகூவுதலை, ஸ்ரீரங்கமென்னும் பெருநகரிலே எழுந்தருளியிருக்கும் பெருமானே பார்த்தருள்வாயாக என்கிறார் இப்பாசுரத்தில்.

## தேசிக மொழி

அம்மா! நீ இயற்றிய ப்ரபந்தங்களில் அர்த்தங்கள் இருக்கட்டும். அதை சிறிதும் புத்தியில் கொள்ளாமல் அதை செவிகொண்டு கேட்கும்பொழுதே உன் சொல் யாவரையும் மயக்கும். இதிலுள்ள வர்ணபத ரஸனையின் இனிமை உண்டே! அது மற்றொன்றுக்கு வருமா? ஒருக்காலும் வராது.

**- ஸ்ரீ கோதாஸ்துதி**

''ஓராயிரமாய் உலகேழளிக்கும் பேர்'' என்றபடி, எம்பெருமானைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு பாதுகாப்பானது அவனுடைய திருநாமம். இங்கு ''மந்திரம்'' என்னாமல், ''நாமம்'' என்றதற்கு, மந்திரம் சொல்லுவதற்கு கால நியமம், அதிகாரி நியமம் முதலிய நியமங்கள் உண்டு, ஆனால் திருநாமம் சொல்லுவதற்கு அந்நியமங்கள் இல்லை என்று காட்டுவதற்காக.

*பச்சைமாமலை போல் மேனி பவளவாய் கமலச்செங்கண் ★*
*அச்சுத அமரறரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும் ★*
*இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகமாளும் ★*
*அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே [2]*

அடியவர்களுக்காகத் திருவரங்கத்திலே நித்யவாசம் செய்யும் எம்பெருமான், பசுமை நிறமுள்ள பெரிய திருமேனியையும், பவளம் போன்ற திருவாயையும், மலர்போன்ற திருக்கண்களை உடையவனாயும், அடியவர்களை ஒரு நாளும் கைவிடாதவனாயும், நித்யாசூரிகளுக்கும், ஆயர்களுக்கும் தலைவனாய் இருக்கிறான். இப்படிப்பட்டவனுடைய திருநாமங்களைச் சொல்லும் இந்த சுவையை விட்டுவிட்டு, வெகு தூரம் போய் பரமபதத்தை ஆளும் செல்வத்தைப் பெறுவதாயினும் அதைத் தாம் விரும்ப மாட்டேன் என்கிறார் ஆழ்வார்.

இதையே ஸ்வாமி தேசிகனும், ''வைகுண்ட்ட வாஸேபி நமேபிலாஷ:'' என்று தம்முடைய வரதராஜ பஞ்சாசத்தில் அருளிச்செய்தார்.

*மொய்த்தவல்வினையுள் நின்று மூன்றெழுத்துடைய பேரால் ★*
*கத்திரபந்துமன்றே பராங்கதி கண்டுகொண்டான் ★*
*இத்தனை அடியரானார்க்கு இரங்கும் நம் அரங்கனாய ★*
*பித்தனைப் பெற்றும் அந்தோ பிறவியுள் பிணங்குமாறே. [4]*

க்ஷத்ரியர்களில் மிகத்தாழ்ந்தவனான க்ஷத்ரபந்து என்னும் ஒருவன், மிகத்தீயவனாய் காட்டில் அலையும் போது, ஒருமுனிவரால் கோவிந்தன் என்னும் நாமத்தை உபதேசம் பெற்று மோட்சத்தை அடைந்தான் என்று ஸ்ரீவிஷ்ணு தர்மத்தில் சொல்லப்பட்டுள்ளது. இங்கு மந்திரம் என்னாமல், பேர் என்றதால் அனைவரும் அநுசந்திக்கும் படியான மூன்றெழுத்து என்றாயிற்று. சேதனனுக்கு மோக்ஷத்தை அளித்த பின்பும், இவனுக்கு ஒன்றும் செய்யவில்லையே என்னும் கழிவிரக்கமே எம்பெருமானிடத்தில் உள்ளது என்கிறார் ஆழ்வார்.

''உன்னடியார்க்கு என்செய்வனென்றே இருத்தி நீ'' என்னும் நம்மாழ்வார் வாக்கும் இங்கு நினைவு கூறத்தக்கது.

*நமனும் முற்கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க ★*
*நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி ★*
*அவனதூர் அரங்கமென்னாது அயர்த்துவீழ்ந்தளியமாந்தர் ★*
*கவலையுள்படுகின்றாரென்று அதனுக்கே கவல்கின்றேனே. [12]*

முன்னொரு காலத்தில் பெரும் பாவங்களையே



செய்து வந்த முத்கலன் என்பவன், தான் செய்த பாவத்துக்கு பரிகாரமாக எள்ளினாலான பசுவை த்தானம் செய்யும்போது ''க்ருஷ்ணார்ப்பணம்'' என்று சொல்லிக் கொடுத்தான். அவன் மரணமடைந்ததும் யமதூதர்கள் அவனை இழுத்துச்செல்லும் போது, யமனால் எதிர்கொண்டழைக்கப் பட்டு உபசாரம் செய்விக்கப்பெற்றான். இதன் காரணத்தை முத்கலன் யமனிடம் வினவ, அதற்கு யமன் நீ க்ருஷ்ண நாமத்தை ஒருமுறை சொல்லியபடியால் இந்த உபசரிப்பு என்றானாம். இதை நரகத்திலிருந்தோர் கேட்ட படியால் அவர்களுக்கு நரகத் துன்பம் ஒழிந்து சுகமுண்டாயிற்று. இப்படிப் பட்ட திரு நாமங்களை உடைய பரிபூரணனான எம்பெருமானை மறந்து, உலக இன்பங்களில் வீழ்ந்து துக்கத்தினால் பீடிக்கப்படுகிறார்களே என்று தாம் கவலைப் படுவதாக்க் கூறுகிறார் ஆழ்வார்.

*குரங்குகள் மலையைநூக்கக் குளித்துத்தாம்புரண்டிட்டோடி ★*
*தரங்கநீரடைக்கலுற்ற சலமிலாஅணிலும் போலேன்*
*மரங்கள்போல் வலியநெஞ்ச வஞ்சனேன் நெஞ்சுதன்னால் ★*
*அரங்கனார்க்காட்செய்யாதே அளியத்தேன் அயர்க்கின்றேனே. [27]*

வானரவீரர்கள் மலைகளைத் தள்ளிக்கொண்டு வர, கபடமற்ற அணில்கள், தாங்கள் தண்ணீரிலே, முழுகி, பின்னர் கரையிலுள்ள மணலிலே புரண்டு, மீண்டும் அலைகள் பொங்கும் கடலை நோக்கி ஓடி அதைத் தூர்ப்பதில் ஈடுபட்டன. இப்படிப்பட்ட நல்லெண்ணம், நித்யகர்மாநுஷ்டானங்களை பகவத் கைங்கர்யமாகச் செய்ய முடியாதவனாக கடினமான மனதைத் உடையவனாயும், திருவரங்கனுக்கு நெஞ்சார அடிமை செய்யாமல் இருப்பவனாயும் தாம் இருப்பதாகச் சொல்கிறார் ஆழ்வார். இப்பாசுரத்தில் பகவத் கைங்கர்யத்தின் மேன்மை சொல்லப்படுகிறது.

*மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிக உணர்ந்து ★*
*ஆம்பரிசறிந்து கொண்டு ஐம்புலன் அகத்தடக்கி ★*
*காம்பறதலைசிரைத்து உன் கடைதலை இருந்து வாழும் ★*
*சோம்பரை உகத்திபோலும் சூழ்புனல் அரங்கத்தானே. [38]*

மஹாபாரதத்துக்கு சரமஸ்லோகம் போல, திருமாலை யாகிற இத்திவ்யப்ரபந்ததிற்கு இப்பாசுரம் அமைந் திருக்கிறது. மேலும், த்வயத்தில் உபாயம் முதல் அடியிலும், உபேயம் இரண்டாவது அடியிலும் சொல்லப்பட்டிருக்க, இப்பாசுரத்தில் உபேயம் முதல் இரண்டு வரிகளிலும், உபாயம் அடுத்த இரண்டு அடிகளிலும் காட்டப்படுகிறது. இப்பாசுரத்தில் ஆழ்வார் ப்ராப்ய, ப்ராபகங்களை அறிவிக்கிறார்.

''அகலகில்லேன்'' பாசுரத்தில், நம்மாழ்வார் த்வயத்தின் பூர்வ கண்டப் பொருளையும், ''சிற்றஞ்சி றுகாலே'' என்னும் பாசுரத்தில் ஆண்டாள் உத்தர கண்டப்பொருளையும் அருளிச்செய்தார்கள் என்பர் பூர்வர்கள். ஆனால் த்வயத்தின் இருபொருள்களையும் ஒரே பாசுரத்தில் சேர்த்து அநுசந்தித்த பெருமையை உடையவர் இவ்வாழ்வார் ஒருவரே.

*அடிமையில் குடிமையில்லா அயல் சதுப்பேதிமாரில் ★*
*குடிமையில் கடமை பட்ட குக்கரில் பிறப்பரேலும் ★*
*முடியினில் துளபம் வைத்தாய் மொய்கழற்கன்பு செய்யும் ★*
*அடியரை உகத்திபோலும் அரங்கமாநகருளானே. [39]*

''நெடுமாற்கடிமை'' என்னும் திருவாய்மொழிப் பதிகத்தில் நம்மாழ்வார் எம்பெருமானின் அடியார் களுடைய பெருமையை அருளிச்செய்தது போல், தொண்டரடிப்பொடியாழ்வாரும் இப்பாசுரத்தில்,

## தேசிக மொழி

அம்மா! ஒருபுறம் பச்சைப் பசும்புல் போன்ற உன் திருமேனியின் நிறத்தினாலும், மறுபுறம் மஞ்சள் கோரோசனை போன்ற பெரிய பிராட்டியின் தேஹ ஒளியினாலும் பூசப்பெற்ற எம்பெருமானின் கரிய திருமேனி மயில் கழுத்து சாயல் பெற்று, மங்களமாக பக்தர்களுக்குக் காட்சி அளிக்கிறது.

**- கோதாஸ்துதி**

பிறப்பு, ஒழுக்கம், குணங்கள் ஆகிவற்றால் குறைவுபட்டாலும், மேம்பொருளில் சொல்லப்பட்ட அடியார்களே நமக்கு ப்ராப்யம், ப்ராபகம் ஆகிய எல்லாமாய் இருப்பவர்கள் என்கிறார். எம்பெருமானை எல்லா உலகங்களுக்கும் ஸ்வாமி, நாம் அவனுடைய சொத்து, பகவத் பாகவத கைங்கர்யம் செய்வதே நம் ஸ்வரூபத்திற்கு தக்கபயன் என்றறிவது இப்பாசுரத்தில் சொல்லப்படுகிறது.

இப்படிப்பட்ட அடியவர்களை, ''பாம்பணை மேல் பள்ளி கொண்டருளும் சீதனையே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியரே'' என்று நம்மாழ்வார் இவர்கள் நித்யஸூரிகளைக் காட்டிலும் மேம்பட்டவர்கள் என்றது இவ்விடத்தில் நினைவு கூறத்தக்கது.

இத்திருமாலையில் ஆழ்வார், 1, 2 பாசுரங்களில் எம்பெருமானின் திருநாமங்களைக் கற்றதனால் தமக்கு உண்டான பெருமையை அவனிடமே அருளிச்செய்து, பரமபதத்தில் கிடைக்கக்கூடிய இன்பம் தமக்கு வேண்டியதில்லை என்றும், பாசுரம் 3ல் மூன்றாம் விபூதியான திருவரங்க வாசமே போதும் என்றும், 4-15 பாசுரங்களில் பகவத்விஷயத்தை சம்சாரிகள் இழப்பதைக் கண்டு பொறுக்காமல், பெரிய பெருமாளுடைய பெருமையை அவர்களுக்கு உபதேசித்தும், அவர்கள் அதை ஏற்காததால், பெருமான் தமக்கு ஐயப்பாடு அறுப்பது முதலாக, பரமபக்தி ஈறாகக் காரணமின்றி விளைத்த பெரிய உதவிகளை 16–25 பாசுரங்களிலும், 26–35 பாசுரங்களில் ஒரு தேச விசேஷத்தில் சென்று அநுபவிப்பதற்கு தேவையான சாதநாந்தரங்கள் எதுவும் தம்மிடம் இல்லை என்றும், 36–37 பாசுரங்களில் ஒரு கைம்முதலுமற்ற நாம் பகவத் விஷயத்தை இழக்க வேண்டியதே என்றும், எம்பெருமான் தமக்கு விசேஷ அநுக்ரஹத்தை செய்ய வேண்டும் எனக் கதறி, அது பெறாமல் பெரு வருத்த முற்றதையும், திருமாலைக்கே உயிர்ப்பாட்டான 38ம் பாசுரத்தில், த்வய, சரமஸ்லோக பொருள்களைச் சொல்லி, 39–43 பாசுரங்களில் பாகவதர்களுடைய பெருமையையும், அவர்களைக் குறைய நினைப்பாருடைய தாழ்வையும் காட்டி, 44ம் பாசுரத்தில் எம்பெருமால் கஜேந்த்ராழ்வானுக்கு அருள்செய்தமையைக் கூறி, இறுதிப்பாசுரமான 45ம் பாசுரத்தில் இத்திருமாலையின் சொல்பொருளைக் கற்றவர்களைப் பெரிய பெருமாள் உகந்து அருளுவர் என்றபடி.

எம்பெருமானை அநுபவித்துக் கைங்கர்யம் செய்யும் உரிமை நித்யசூரிகளைப் போலத் தமக்கும் உண்டாய் இருக்க, அநாதிகாலமாக அதை அறியாமல், ''தேஹமே ஆத்மா'' என்றும். ''சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்'' ஆகிய இந்த்ரியங்களே இனிமையானவை என்றும் நினைத்து அவற்றையே விரும்பி, ஸம்ஸாரத்தில் விலகிப் போந்த ஆழ்வாருக்கு, பெரிய பெருமாள் தம்முடைய ஸ்வரூப, ரூப, குண, விபூதி சேஷ்டிதங்கள் ஆகியவற்றைச் சொல்லும் திருநாமங்களின் பெருமையைக் கையில் கனியென்னக் காட்டியருள, ஆழ்வார் அதைத் தாம் கண்டு அநுபவித்து, அநுபவிக்க விரும்பும் மற்றவர்களையும் அநுபவிக்கச் செய்யும் வல்லவராய், பெரிய பெருமாளையும் உகப்பித்து இத்திருமாலை என்னும் ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்.

## மார்கழியில் முக்கிய உத்ஸவங்கள்

**தொண்டரடிப்பொடி ஆழ்வார் சாற்றுமுறை**
டிஸம்பர் 25 (புதன்)

**ஹனுமத் ஜயந்தி**
டிஸம்பர் 26 (வியாழன்)

**அத்யயன உத்ஸவம் -- பகல் பத்து**
டிஸம்பர் 27 (வெள்ளி) முதல் 10 நாட்கள்
பகல்பத்து சாற்றுமுறை -- ஜனவரி 5 (ஞாயிறு)

**ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் (10 நாட்கள்)**
ஜனவரி 5 (ஞாயிறு) முதல் 14 (செவ்வாய்) வரை

**வைகுண்ட ஏகாதசி**
ஜனவரி 6 (திங்கள்)

**அத்யயன உத்ஸவம் -- இராப்பத்து**
ஜனவரி 6 (திங்கள்) முதல் 10 நாட்கள்
நம்மாழ்வார் திருவடித்தொழல், இராப்பத்து சாற்றுமுறை -- ஜனவரி 15 (புதன்)

**போகி உத்ஸவம்**
ஜனவரி 14 (செவ்வாய்)

**தை வருஷப்பிறப்பு, ஸங்க்ராந்தி உத்ஸவம்**
ஜனவரி 15 (புதன்)

# 4. Sri Abhithi Sthavam

Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Travails and tribulations of a distressed soul, steeped in unswerving devotion to the Lord, found an expression in the form of Sri Abhithisthavam, a hymn of 29 Slokas. Abhithi means fearlessness and Swami Desika prays for just that. His pleadings with Ranganatha did not go unanswered.

This hymn has a poignant historical background. It invokes the Divine grace to dispel the sense of horror and panic that engulfed South India in general and Srirangam in particular. This period may be described as one of the darkest in the annals of Indian history.



It was in the aftermath of the invasion in the year 1327 A.D. by Malik Kafur, the general of Alauddin Khilji. The unruly army chief attacked and plundered many religious centres across South India. Temples were demolished, many innocent people lost their lives even as houses were razed to the ground.

Threat to the Srirangam temple became imminent, anguishing and unnerving the devotees. They had no option but to move the idols to another place. A distraught Swami Desika did not want to live in Srirangam sans Namperumal and left the town. It was a forced departure for the specific purposes of saving Sudharsana Suri's 'Srutha Prakaasika' and his two sons. Few years later, he settled in Thirunarayanapuram (Melkote) and then moved to Sathyamangalam where he composed this Sthothra.

In the meantime, the idol of Srirangam deity reached Tirupati by a circuitous route with the help of some devotees. Later, one Gopanna Raayaa, the chieftain of Ginjee (Senji) brought the idol to his place and worshipped it there for some time before reinstalling the same in Srirangam after normalcy was restored.

Knowing this, Swami Desika was pleased that his devotion had fructified finally. He soon arrived in Srirangam and worshipped Namperumal in Serthi (with Ranganatha, the Moolavar) and basked in ecstasy. Thus the Supreme Lord lived up to His name(s) Bhaya Kruth, Bhaya Nasana: - The creator of fear and its destroyer too. - Vishnu Sahasranama Sthothram - 89.

In a tribute to the great deed by Gopanna Raayaa, Swami Desika composed a verse in Sanskrit (Aaneeya Neela...), which one can see in an inscription even now in the Srirangam temple (Opposite to Kili Mantapam).

Coming back to Sri Abhithi Sthavam, Sloka No. 26 establishes the supremacy (Para Thathva Nirnayam) of Sri Bhagavan in unequivocal terms. "Oh Lord, whomsoever you had decided to kill, cannot be saved by anyone – Brahma, Rudra, Indra, Yama. Similarly, whomsoever you had decided to protect, none of them can even touch him. That being the case, we ought to feel safe. Pray, rid of the enemies without a trace from Srirangam and other shrines. This will be a great boon to us, Your devotees."

Unassailable faith, indeed! Parallels to this can be drawn in Thvayi Rakshathi... (Sri Kamasikashtakam - 8) and Thvayi Pravruthe... (Sri Ashta Bhujashtakam – 6).

There is an interesting pointer to the time of composition of this hymn, in Sloka No. 28. The author says that he had spent all his youth enjoying the delectable works of Sri Bhashyakara and that his hair had turned grey, and asks the Lord what would he want at that old age. This indicates that Sri Desika was about sixty then.

He prays to Lord Ranganatha to bless him for the rest of his life, with a peaceful and harmonious environment amidst good-hearted well-wishers, a place which is free of envy and hatred, one where there wouldn't be any trace of enemies.

In the Phala Sruti, Swami Desika makes a call to those who want to rid of all kinds of fear and become self-confident, to recite the hymn with faith and devotion. This he asserts, will not only provide the secure protection of Lord Ranganatha, but also fulfil all their wishes.

***To be continued...***

# SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM

and

# SRI PARTHASARATHY SWAMI SABHA

*present*

# PADDHATHI MUSIC FEST 2019

## – A Traditional Music Fest –

**Venue: SRI DESIKA VIDHYA BHAWANAM, 27, Venkatesa Agraharam Road, Mylapore - 600 004.**

**December 25th to 31st 2019**

In association with : Nalli® CHINNASAMI CHETTY

**Programme Schedule**

**25-12-2019 (Wednesday)**

2.00 p.m. Mangala Isai: **Triplicane Sri K. SEKAR - Thavil and Nadaswaram** Sri G.K RAGHURAM & Party
3.00 p.m. **Rahul Vellal** (Vocal) - Saketh Pantula (Violin) - Rohit Prasad (Mrudangam) - Ram Siva (Kanjira)
4.45 p.m. **Inaugural Function and conferring the title 'Acharya Shiromani'** on Dr. PREMEELA GURUMURTHY
5.15 p.m. "Ananda Natana Prakasham-Songs of Shiva" by **Dr. Subha Ganesan** (Vocal) - Dr.Usha Rajagopalan (Violin) - Nellai A.Balaji (Mrudangam)
7.00 p.m. **Mysore Brothers- M. Nagaraj** and **Dr. M. Manjunath** (Violin Duo) - B.Harikumar (Mrudangam) - Guru Prasanna (Khanjira)

**26-12-2019 (Thursday)**

10.00 a.m. **Yoga Advaith Veturi** (Vocal) - Bhargav Tumkur (Violin) - Arjun Raghavan (Mrudangam)
11.00 a.m. **Hiranmayee** (Vocal) - Sudha R.S.Iyer (Violin) - Prashanth B.S. Pulivendula (Mrudangam)
11.00 p.m. **Malladi Sindhu Rajeswari** (Vocal) - Srinath Hariharan (Violin) - Karthikeya Adinarayana Sharma (Mrudangam)
2.00 p.m. **Rasika Murali** (Vocal) - Arvind Raman (Violin) - Ajay Gopi (Mrudangam)
3.15 p.m. **N.S.Kamakshi** (Vocal) - Bhairavi Raman (Violin) - Dr. Seetharaman (Mrudangam)
5.00 p.m. **Dr. R. Ganesh** (Vocal) - Kalyani Shankar (Violin) - Chidambaram Balashankar (Mrudangam)
7.00 p.m. **Vijayalakshmi Subramaniam** (Vocal) - M.R.Gopinath (Violin) - Shertalai Ananthakrishnan (Mrudangam) - Harihara Sharma (Kanjira)

**27-12-2019 (Friday)**

10.00 a.m. **Surya Ganesan** (Vocal) - Haritha Narayanan (Violin) - M.Kaneshathasan (Mrudangam)
11.00 a.m. **Sruti Sarathy** (Violin Solo) - Akshay Ananthapadmanabhan (Mrudangam)
1.00 p.m. **Pranav Arcot** (Mandolin) - C.S. Chinmayee (Violin) - Surya Ganesan (Mrudangam)
2.00 p.m. **Arjun Subramanian** (Vocal) - Rishab Ranganathan (Violin) - Seyoon Raghavan (Mrudangam)
3.15 p.m. **Swathi Srikrishna** (Vocal) - Thirucherai Karthik (Violin) - Nirmal Narayan (Mrudangam)
5.00 p.m. **Shankar Ramani** (Vocal) - Vijay Ganesh (Violin) - Sherthalai Ananthakrishnan (Mrudangam) - S. Venkataramanan (Kanjira)
7.00 p.m. **Kiranavali Vidyasankar** (Vocal) - S.R Rajashree (Violin) - Mannarkoil J.Balaji (Mrudangam) - Udupi Balakrishnan (Ghatam)

**28-12-2019 (Saturday)**

| | |
|---|---|
| 9.00 a.m. | Group Singing by Students of **Carnatica Gurukulam** presented by **Neeraja Badrinath** |
| 10.00 a.m. | **Sai Vignesh** (Vocal) - Visvesh Chandraekhar (Violin) - P.L. Harikrishna (Mrudangam) |
| 11.15 a.m. | **Dr. Sanjay Subramanian** (Vocal) - Arun Ramamurthy (Violin) - Nirmal Narayan (Mrudangam) |
| 1.00 p.m. | **Ajitha Bala** (Vocal) - Vishwesh Swaminathan (Violin) - Mysore Vadiraj (Mrudangam) |
| 2.00 p.m. | **Anirudh Raja** (Vocal) - Vishal Sowmyan (Violin) - Srikar Chittori (Mrudangam) |
| 3.15 p.m. | Swetharanyam Sisters **Nithya & Vidhya** (Vocal duet) - Madan Mohan (Violin) - Ram Sriram (Mrudangam) |
| 5.00 p.m. | **Aruna Prabha Ranganathan** (Vocal) - M.A.Krishnaswamy (Violin) - Thanjavur Subramaniam (Mrudangam) - B.S. Purushotham (Kanjira) |
| 7.00 p.m. | **Sankari Krishnan** (Vocal) - Pakkala Ramdas (Violin) - Dr. Ashok Kalidas (Mrudangam) - Dr. Sukanya Ramgopal (Ghatam) |

**29-12-2019 (Sunday)**

| | |
|---|---|
| 9.30 a.m. | **Sowmya Subramanian** (Vocal) - Madan Mohan (Violin) - Adhuthurai Guruprasath (Mrudangam) - K.Ranganathan (Ghatam) |
| 11.00 a.m. | **T C A Sangeetha** and **M.Sidharth** (Veena Duo) - Umayalpuram Kalyanaraman (Mrudangam) |
| 1.00 p.m. | **K.Giridharan** (Vocal) - Delhi Sridhar (Violin) - Vishvak Kumaran (Mrudangam) |
| 2.00 p.m. | **Jayakrishnan Unni** (Vocal) - V.Nandika (Violin) - Shankar Prasad .S (Mrudangam) |
| 3.15 p.m. | **Abhilash Giri Prasad** (Vocal)- N.M. Brahmadathan (Violin) - Raghavan Sai (Mrudangam) |
| 5.00 p.m. | **Ramnath Iyer** and **Gopinath Iyer** (Veena Duo) – Ethirajan Ramanujan (Mrudangam) – G. Ravichandran (Ghatam) |
| 7.00 p.m. | **Rudrapatnam Ramakanth** (Vocal) – Hyderabad Kum.Shivani (Violin) - Vijay Natesan (Mrudangam) |

**30-12-2019 (Monday)**

| | |
|---|---|
| 10.00 a.m. | **P.Harikishan** (Vocal) - Aparna Thyagarajan (Violin) - Sriram Srinivasan (Mrudangam) |
| 11.00 a.m. | **Abhishek Ravishankar** (Vocal) - V.S.Gokul (Violin) - Arjun Ramachandran (Mrudangam) |
| 1.00 p.m. | **Vaishnavi Ramadas** (Vocal) – G.Raghavendra Prasath (Violin) - Vignesh Ravi (Mrudangam) |
| 2.00 p.m. | **Anjana Thirumalai** (Vocal) – Priyamvadaa Sastri (Violin) - Karun Salvady (Mrudangam) |
| 3.15 p.m. | **Brinda Manikavasakam** (Vocal) - Sudha R.S.Iyer (Violin) - Sumedh Ramakrishna (Mrudangam) |
| 5.00 p.m. | **Dr.Prema Rangarajan** (Vocal) - M.R.Gopinath (Violin) - J.Balaji (Mrudangam) – Madipakkam Murali (Ghatam) |
| 7.00 p.m. | Harikatha on **"Azhwargal Carithram"** by **U. Ve. Dushyant Sridhar.** Vocal Support – **Archana Bharathwaj & Aarti Bharathwaj** - Madan Mohan (Violin) - Ambur Padmanabhan (Mrudangam) |

**31-12-2019 (Tuesday)**

| | |
|---|---|
| 10.00 a.m. | **Shruthi Ganesh** (Vocal) - Harini Rangarajan (Violin) - Mihir Ganesan (Mrudangam) |
| 11.00 a.m. | **Prithi Narasimhan** (Vocal) – Parur M.S. Ananthashree (Violin) - Anirudh Srinivasan (Mrudangam) |
| 1.00 p.m. | **Anish & Arjun** (Violin Duet) - Jayendra Kumar (Violin) - Ram Siva (Mrudangam) |
| 2.00 p.m. | *Mandolin Sisters* **Srresha & Sreeusha**, Aduthuurai Guruprasath (Mrudangam), K.Ranganathan (Ghatam) |
| 3.15 p.m. | **V.Deepika** (Vocal) - Karthik P. Iyer (Violin)- Ethirajan Ramanujan (Mrudangam) |
| 5.00 p.m. | **Sangeetha Swaminathan** (Vocal) - M.R.Gopinath (Violin) - Kumbakonam Swaminathan (Mrudangam), Nanganallur Swaminathan (Ghatam) |
| 7.00 p.m. | **Mambalam Sisters** (Vocal Duet)- Dr. R. Hemalatha (Violin), B.Ganapathyraman (Mrudangam) - Harihara Sharma (Khanjira) |

***All are welcome***

***Event Coordinated by*** CARNATICA ARCHIVAL CENTRE, USA

carnaticworld.com Carnatic World Your musical dreams... Now a reality

ஸ்ரீ:



*With Best Compliments from:*

# K. Gopala Desikan,

**T-3, 'Mithila', 15/17, Justice Sundaram Road,**

**Mylapore, Chennai 600004.**

**SVDD thanks Sri K. Gopala Desikan**
for sponsoring this month's issue of Desika Sandesam




கலியன் உத்ஸவம் - ஆஸ்தானம்